# வெற்றி செல்வியின் IAS வெற்றியின் ரகசியம் - மனிதநேயம் ஐ.ஏ.எஸ். அகாடமி

**"தன்னம்பிக்கையுடன் கூடிய அர்ப்பணிப்பு உணர்வு, எழுத்து பயிற்சி, வாசிப்பு பழக்கம், நேர மேலாண்மை, விடா முயற்சி போன்றவை இருந்தால் சிவில் சர்வீசஸ் தேர்வில் எளிதாக வெற்றி பெற்று ஐ.ஏ.எஸ் ஆகலாம்"** என்கிறார் வெற்றி செல்வி.




வெற்றி செல்வி மேல்நிலைக்கல்வியை பெரம்பூர் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நிறைவு செய்தார். கல்லூரி படிப்பில் தாவர உயிர் தொழில்நுட்பம் படித்தார். ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்றுள்ள அவர் கூறுகிறார்..

*"எங்கள் பூர்வீகம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சூரக்குடி கிராமம். 1977-ஆம் ஆண்டு அந்த பகுதியில் காட்டாற்று வெள்ளம் புகுந்திருந்தது. அங்கு கலெக்டர் முகாமிட்டு நிவாரண பணிகளை திறம்பட செய்தார். அவரின் திறனையும், சேவை மனப்பாண்மையையும் பார்த்த என் அப்பா எங்கள் குடும்பத்தில் ஒருவராவது ஐ.ஏ.எஸ். ஆக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவருடைய கனவை நனவாக்க வேண்டும் என நான் விரும்பினேன். ஆதலால் பள்ளிப்பருவத்திலேயே ஐ.ஏ.எஸ். என்ற ஆசை துளிர் விட்டது.*

*நான் 10-ம் வகுப்பு படிப்பதற்குள் 3 மெட்ரிகுலேசன் பள்ளிகள் மாறிவிட்டேன். குடும்ப சூழ்நிலை காரணமாக மேல்நிலைக் கல்வியை தொடருவதில் சிக்கல் இருந்தது. 11,12-ம் வகுப்புகளை மாநகராட்சி பள்ளிகளில் படித்தேன். சென்னை எத்திராஜ் கல்லூாயில் தாவர உயிர் தொழில்நுட்பம் படித்தேன்.* ***ஐ.ஏ.எஸ். கனவுக்கு முழு செயல்வடிவம் கொடுத்தது சென்னை மேயர் சைதை துரைசாமி நடத்தும் மனிதநேயம் ஐ.ஏ.எஸ். அகாடமிதான். ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும் என்றால் டெல்லிக்குத்தான் செல்ல வேண்டும் என்ற நிலையை மாற்றி என்னைப்போன்ற நடுத்தரவாக்கத்தினரும், ஏழை மாணவர்களும் ஐ.ஏ.எஸ். ஆவதற்கு இந்த அகாடமி வழி காட்டி கொண்டிருக்கிறது. இலவசமாக பயிற்சி கொடுத்ததுடன் ஆரோக்கியமான உணவையும் வழங்கினார்கள். பயிற்சி மையத்தினர் தனி கவனம் செலுத்தி பயிற்சி கொடுத்தார்கள். ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று பணிபுரிபவர்களை அழைத்து வந்து பயிற்சி கொடுத்தார்கள். மாதிரி நேர்முக தேர்வுகளும் நடத்தினார்கள். அதை வீடியோவில் பதிவு செய்து நாம் செய்திருக்கும் தவறுகளை சுட்டிக்காட்டி திருத்தினார்கள். அது நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற உதவியாய இருந்தது. டெல்லியில் நடந்த நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து தந்தனர்"*** என்று மனம் நெகிழ்கிறார்.

சிவில் சர்வீசஸ் தேர்வில் 2-வது முயற்சியில் வெற்றி செல்வி வெற்றி பெற்றிருக்கிறார்.

********(Dinathanthi -Kudumba Malar -07/09/14)**